1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் நிலம் கையகப்படுத்துவதில் பல்வேறு தடைகள் இருந்தன. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டுதான் தமிழக அரசு கடந்த 7 நாட்களுக்கு முன்பு கவர்ன்மெண்டு பிளீடர் ஒருவரை நியமித்து இருக்கிறது. எந்த தடைகளையும் கூடிய விரைவில் நீக்குவதற்கு உண்டான சூழ்நிலையின் காரணமாகத்தான் அவரை நியமித்து இருக்கிறோம். ஆகவே, தடைகள் நீக்கப்பட்டு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரமங்கலம் மருத்துவமனை

* 3176 திரு. ஏ. கோதண்டம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

திருப்பெரும்புதூர் வட்டத்தில் மதுரமங்கலம் ஊராட்சியில் உள்ள அரசினர் பொது மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டம் திருப்பெரும்புதூர் ஒன்றியம் மதுரமங்கலம் கிராமத்தில் அரசினர் பொது மருத்துவமனை இல்லை. அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது.

ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு மருத்துவர்கள் என்ற அடிப்படையில் மதுரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்கள் பணி செய்வதால், மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலாது.

திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஒன்றியம், மதுரமங்கலம் கிராமத்தில் அரசினர் பொது மருத்துவமனை இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆரம்ப சுகாதார மருத்துவ மனையில் இன்னும் பல மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 2 மருத்துவர்கள்தான் நியமிக்கின்ற வழக்கம். ஆகவே, 2 மருத்துவர்கள் அங்கே நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.